DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **C.C.No.56/2025**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

| | | |
|---|---|---|
| Name | : | அங்கீஸ்வரன் (சார்பு ஆய்வாளர்) (PW.10) |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 19th day of June 2026

(1வது எதிரி ஆஜர். 2 முதல் 4 எதிரிகள் ஆஜர் இல்லை. மேற்படி எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச பிரிவு – 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது )

**முதல் விசாரணை –**

1. நான் தற்போது தளவாய்புரம் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 13.08.2024ம் தேதி கட்டனூர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது கட்டனூர் காவல் நிலைய குற்ற எண். 10/2023 பிரிவுகள் 147, 294(பி), 323 இதச மற்றும் 4 of TNPHW Actன் படி சார்பு ஆய்வாளர் திரு. சரவணராஜ் அவர்கள் வழக்கு பதிவு செய்த வழக்கு கோப்பினை எனது விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சார்பு ஆய்வாளர் விசாரித்த சாட்சிகளை நான் விசாரணை செய்தபோது சார்பு ஆய்வாளரிடம் கூறியதுபோலவே என்னிடமும் கூறியதால் நான் தனியாக வாக்குமூலங்கள் பதிவு செய்யவில்லை.

2. இவ்வழக்கின் 5வது எதிரி முனிஸ்வரன் இளஞ்சிறாரை தகவல் தெரிவித்து வரவழைத்து அன்று மாலை 6.15மணிக்கு காவல் நிலையத்தில் வைத்து கைது செய்து ஜாமினில் விடுவித்தேன். மற்ற எதிரிகள் மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் முன்ஜாமின் பெற்றபடியால் அவர்களை கைது செய்யவில்லை. இத்துடன் எனது விசாரணை முடித்து எதிரிகள் நாகமலை, லெட்சுமி, மணிகண்டன், பாலமுருகன் ஆகியோர் மீது பிரிவுகள் 147, 294(பி), 323 இதச r/w 4 of TNPHW Actன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

**எ.த.கு.வி–**

1. இந்த வழக்கானது 5 மாதம் காலதாமதமாக வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். 5 மாதம் காலதாமதத்திற்கான காரணம் எதுவும் முதல் தகவல் அறிக்கையில் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் சம்பவம் நடந்தவுடன் காயம்பட்ட நபரோ, அவரது உறவினர்களோ காவல் நிலையத்திற்கு நேரடியாக சென்று புகார் கொடுத்தார்களா என்றால் எனக்கு ஞாபகமில்லை. 28.12.2022ம் தேதியன்று சம்பவ நடந்த நாளில் காவல் நிலையத்தில் ஆஜராகி புகார் கொடுத்திருந்தால் அப்போது நிலையத்தில் இருந்த அதிகாரிகள் வழக்கு பதிவு செய்திருப்பார்கள் என்றால் சரிதான்.

2. சம்பவம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கவில்லை என்று நரிக்குடி வட்ட காவல் ஆய்வாளரிடமோ, துணை காவல் கண்காணிப்பாளரிடமோ பாதிக்கப்பட்ட நபர்கள் புகார் கொடுத்தார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எந்த காலகட்டத்தில் கட்டனூர் காவல் நிலைய பொறுப்பில் நான் சேர்ந்தேன் என்றால் ஜீலை மாதம் 2024ம் வருடம் பணியில் சேர்ந்தேன். வழக்கின் சம்பவ சாட்சிகள், புகார்தாரர் யார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

3. சம்பவ இடத்திற்கு சென்றுள்ளேனா என்றால் சென்றேன். சம்பவ இடத்தில் பார்வை மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ள சாட்சிகளை சாட்சிகளாக விசாரித்துள்ளேனா என்றால் நான் சென்றபோது வழக்கு கோப்புகளில் உள்ள சாட்சிகளை விசாரித்தேன், மற்ற சாட்சிகள் அங்கு இல்லை என்பதால் அவர்களை விசாரிக்கவில்லை. நான் எப்போது சம்பவ இடத்திற்கு சென்றேன் என்றால் 13.08.2024ம் தேதியன்று சென்றேன். லெட்சுமி என்பவர் ஜெயாவை அவுசாரி , தேவுடியா என்று திட்டியதாக எனது விசாரணையிலோ, புகார் மனுவிலோ தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். காயம்பட்ட நபர்கள் திருச்சுழி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேரவில்லை என்றால் சரிதான்.

4. காயம்பட்ட சென்றதாக சொல்லக்கூடிய 108 ஆம்புலன்ஸ் டிரைவரை இந்த வழக்கில் நான் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். 108 ஆம்புலன்ஸ் மூலம்தான் சிகிச்சைக்கு சேர்ந்ததாக எனது விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். மருத்துவரை நான் விசாரித்தேனா என்றால் ஆமாம். அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனையில் காயம்பட்டவர்கள் விபத்து பதிவேட்டினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதில் திருச்சுழி விபத்து பதிவேட்டு எண்.950, 951 குறிப்பிட்டுள்ளபடி காயம் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். திருச்சுழி அரசு மருத்துவமனையில் உள்ள மருத்துவர்களை விசாரித்தால்தான் காயம் எவ்வாறு ஏற்பட்டது என்று தெரியவரும் என்றால் சரிதான். இந்த வழக்கில் அவ்வாறு திருச்சுழி அரசு மருத்துவமனை மருத்துவரை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் சொன்ன மாதிரி சொன்ன நாள் நேரத்தில் சார்பு ஆய்வாளர் புகாரை பெற்று வழக்கு பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது மாவட்ட காவல் கண்காணிப்பாளர்

அவர்களிடமிருந்து 6 மாதம் கழித்து அரசியல் நெருக்கடி காரணத்தின் காரணமாக எதிரிகள் மீது உயர் அதிகாரிகளுக்கு பயந்து பொய்யான புகாருக்கு வழக்கு பதிவு செய்து அதற்கு ஆதரவாக சாட்சிகளை உருவாக்கி எதிரிகள் மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஏற்கனவே எதிரிகளுக்கும் வாதிகளுக்கும் உள்ள சிவில் வழக்கு தொடர்பான பிரச்சனையை அசா1 அவரது வழக்கறிஞர் மூலம் நடக்காத சம்பவத்திற்கு நடந்ததாக ஒரு புகார் தயார் செய்யப்பட்டு உயர் அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டு அதன்பேரில் பொய்யாக இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. சம்பவ இடம் செல்லாமலும் மருத்துவர் யாரையும் விசாரணை செய்யாமல் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பார்வை மகஜர், மாதிரி வரைபடம் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை –**

**இல்லை.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.